அவ்வறிக்கை வைக்கப்பெறும் அன்று உறுப்பினர்கள் துணைக் கேள்விகள் கேட்கலாம்.

வினா எண்கள் 39-ம், 40-ம் மாண்புமிகு அமைச்சரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்பெறுகின்றன.

வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

(குறிப்பு:—ஓர் உரையின் தொடக்கத்தில் (*) உடுக்குறியிடப் பெற்றிருந்தால் உறுப்பினரால் அவ்வுரை சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.)

(முற்பகல் 10-10)

(2). தகவல் கோரல்

உறுப்பினர்கள் கொடுத்துள்ள அறிவிப்புகள்

திரு. அ. ரகுமான்கான்: சார், பாயின்ட் ஆஃப் ஆர்டர். மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, இலங்கையிலே மரண தண்டனை அளிக்கப்பட்டிருக்கிற திரு. ஜெகன், திரு. குட்டிமணி பற்றி........

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது பற்றிய பிரச்சனை பின்னால் வருகிறது. அதனால் இப்போது நான் அனுமதிக்கவில்லை; உட்காருங்கள்.

திரு. வீ. கிருஷ்ணமூர்த்தி: அரசாங்கத்தின் சார்பாகவே அதைக் கொண்டு வருகிறீர்கள் என்று சொன்னால், பரவாய் இல்லை. அதில் எல்லோரும் பேசிக் கொள்ள வாய்ப்பு இருக்கிறது....(குறுக்கீடு)

திரு. அ. ரகுமான்கான்: தலைவர் அவர்களே, நான் என்ன சொல்கிறேன் என்பதைத் தயவு செய்து முதலிலே கேட்டுவிட்டு பிறகு தீர்ப்புச் சொல்லுங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் சொல்வது வெளிநாட்டு விவகாரம். அது குறித்து தலைவர்கள் எல்லாம் கலந்து பேசி ஒரு முடிவுக்கு வருவார்கள். அப்படி முடிவிற்கு வந்தவுடனே, சபையில் அதனை எடுத்துக் கொள்ள அனுமதிக்கிறேன். பிறகு நீங்கள் பேசலாம்.

1982 செப்டம்பர் 8]

திரு. ரா. உமாநாத் : பேரவைத் தலைவர் அவர்களே, அவை சம்பந்தமாக நான் ஒரு பிரச்னையை தெளிவுபடுத்திக் கொள்ள விரும்புகிறேன். சபை நடக்கும் இந்தக் கூடத்தை 8.45 மணிக்குத்தான் காலையில் திறக்க வேண்டும் என்று உத்தரவு இருப்பதாகச் சொல்லப்படுகிறதே. அப்படியென்றால டேபிள்களில் பேப்பர்களை வைப்பதற்கோ டஸ்ட் கிளீன் போன்ற வேலைகளுக்கோ நேரம் போதாதே, ஆகவே அது மாதிரி உத்தரவு இருக்கிறதா? இருந்தால் அதை மாற்றுவீர்களா என்று அறிய விரும்புகிறேன்?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நானே இங்கே காலையில் 8¼ மணிக்கெல்லாம் வந்துவிடுகிறேன் அதனால் என்னை நம்பி முன்னதாகவே திறக்கலாம் என்று உத்தரவு பிறப்பித்து விடுகிறேன்.

திரு. இரெ. இராசமாணிக்கம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அணையிலிருந்து தண்ணீர் திறந்து விடுவதிலே ஏற்பட்ட சிக்கல் காரணமாக, தஞ்சை மாவட்டத்திலே ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : காவிரி நீர் பிரச்னையை அவையில் எடுத்துக்கொள்ளும்போது 1½ மணி நேரம் ஒதுக்குகிறேன், அப்போது நீங்கள் பேசலாம்.

திரு. ப. தீர்த்தராமன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாள் 31-3-1982 அன்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடம் என் தொகுதியின் சார்பாக ஒரு மனுவைக் கொடுத்திருக்கிறேன். அந்த மனுவிற்கு அமைச்சரிடம் இருந்து எனக்குப் பதில் வரவில்லை. ஆனால் அரசு இணைச் செயலாளரிடமிருந்து வந்திருக்கிறது. நான் கேட்டது என்னுடைய தொகுதி சம்பந்தப்பட்ட தர்மபுரி மாவட்டப் பிரச்னை. செயலாளரிடமிருந்து வந்த பதிலிலே, மதுரை மாவட்ட ஆட்சித் தலைவருக்கு அந்த மனுவின் மீது நடவடிக்கை எடுக்கச் சொல்லி கடிதம் எழுதிவிட்டு எனக்கு அதன் பிரதியைத் தந்திருக்கிறார்கள். தர்மபுரி மாவட்டப் பிரச்னைக்கு மதுரை மாவட்ட ஆட்சித் தலைவர் எப்படி நடவடிக்கை எடுப்பார்? உறுப்பினர்களுக்கே இது போன்ற பதில் வந்தால் தனிப்பட்ட மனிதர்களுக்கு எப்படியோ....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினர் திரு. தீர்த்தராமன் அவர்கள் அது பற்றிய முழு விவரமும் எனக்கு முதலிலே எழுதிக் கொடுக்கட்டும் பிறகு விசாரிக்கிறேன். சபையிலே இப்படி திடீர் என்று எழுந்து எது சம்பந்தமாக என்று புரியாமலேயே சொன்னால் எப்படி புரிந்து கொள்ள முடியும்? எப்படி தீர்ப்பு வழங்க முடியும்?

திரு. செ. சிவசாமி : பேரவைத் தலைவரவர்களே, 6-9-1982 ஆம் தேதியன்று நான் கிழக்கு முகவை மாவட்டத்தில் குடிதண்ணீர்ப் பஞ்சம் மிகக் கடுமையாக இருக்கிறது என்று ஒத்தி வைப்புத் தீர்மானம் கொடுத்திருந்தேன். அது எப்பொழுது வரும் என்று சொல்லப்படுமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வறட்சி பற்றி இந்த அவையிலே கொண்டு வரப்படும்போது, இதையெல்லாம் அதிலேயே பேசிக் கொள்ளுங்கள்.

திரு. ந. சிவஞானம் : தலைவரவர்களே, இரண்டு நாட்களுக்கு முன்பு தஞ்சை மாவட்டத்திலே அம்மாபேட்டை பஞ்சாயத்திலே தாக்கியது குறித்து......

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திடீரென்று எழுந்து இதுபோன்ற பிரச்சினைகளை எல்லாம் கேட்கக்கூடாது. அப்படிக் கேட்டால் அதற்கு யார் என்ன பதிலைச் சொல்ல இயலும்? எனவே முறைப்படி எப்படி கொண்டுவர வேண்டுமோ அப்படி அவையிலே கொண்டுவர வேண்டும்.

3. ஒத்திவைப்புத் தீர்மானம்.

மலுமிச்சம்பட்டி எவரெஸ்ட் என்ஜினியரிங் தொழிற்சாலையில் கலகம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கு. ரமணி, ரா. கிருஷ்ணன், என். பழனிவேல், பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம் ஆகியோர் ''கோவை மாநகரத்திலிருந்து பொள்ளாச்சிக்குச் செல்லும் பாதையில் மலுமிச்சம்பட்டியில் உள்ள எவரெஸ்ட் என்ஜினீயரிங் தொழிற்சாலையில் 3-9-1982 அன்று கலகம் விளைவித்து பலர் கத்தியால் குத்தப்பட்டும்,